ஒரு தலைவன் வரவுக்காய் காத்திருந்தோம்
எங்கள் தலைவன் பிறந்தான்
எங்கள் பகைவன் ஓடிப் பறந்தான் 2

மண்ணை வறவா எம் தலைவன் அவன் எங்கள்
மண்ணில் வேர் ஊன்றி நின்ற வனை
அன்னை மண் பறிக்கும் மாற்றார் எதிரில் அவன்
அனலை பொழிகின்ற ஏவுகணை 2
பிரபாகரன் காலம் தந்த கொடை
அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை 2

ஒரு தலைவன் வரவுக்காய் காத்திருந்தோம்
எங்கள் தலைவன் பிறந்தான்
எங்கள் பகைவன் ஓடிப் பறந்தான

நெஞ்சு நெருப்பாகி நிமிர்ந்த தமிழீழ
நிலத்தை உருவாக்கி காட்டியவன்
பிஞ்சு மழைக்கும் பகைவன் நஞ்சுடல்
விளக்கும் தமிழ் வீரம் ஊட்டியவன் 2
பிரபாகரன் காலம் தந்த கொடை
அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை 2

ஒரு தலைவன் வரவுக்காய் காத்திருந்தோம்
எங்கள் தலைவன் பிறந்தான்
எங்கள் பகைவன் ஓடிப் பறந்தான்

வாழத்துடித்த தமிழ் இனத்தின் வதை தீர்த்து
வரலாறு படைத்த வழிகாட்டி
ஈழத் தமிழ் மண்ணின் தலைவன் அவன் எங்கள்
இனத்தை கரைசேர்த்த படகோட்டி 2
பிரபாகரன் காலம் தந்த கொடை
அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை 2

ஒரு தலைவன் வரவுக்காய் காத்திருந்தோம்
எங்கள் தலைவன் பிறந்தான்
எங்கள் பகைவன் ஓடிப் பறந்தான்

மானத் தமிழ் மாந்தர் மறவர் வரலாற்றில்
வான்படை கண்ட முதல் தமிழன்
தானைத் தலைவன் உலகேங்கும் வாழ் தமிழர்
தாகம் தீர்க்க வந்த தனித் தலைவன் 2
பிரபாகரன் காலம் தந்த கொடை
அவன் பிறந்தான் பிறந்தது புலிகள் படை 2

ஒரு தலைவன் வரவுக்காய் காத்திருந்தோம்
எங்கள் தலைவன் பிறந்தான்
எங்கள் பகைவன் ஓடிப் பறந்தான்